
BTA
BERGEN TAMILSK AVIS

# தேன்தமிழிதழ்

Bergen Tamilsk Avis,
Krohnegården 5b,
5146 Fyllingsdalen,
Norway.

Org.nr: 926 840 320 - ISSN: 2703-8440 (Print ISSN: 2703-8785)



ஓவியம்: T.சௌந்தர்

Bergen Tamilsk Avis - no.30 - Sep. 2023 - தேன் தமிழிதழ் - மாத இதழ் - இல.30 புரட்டாதி - 2023

## உறவுகளுக்கு வணக்கம்

2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் நடந்தேறிய இறுதி யுத்தத்தின் பின்னர், தமிழர் பகுதிகள் எங்கும் பல்வேறு வன்முறைகளும், சமூக சீர்கேடுகளும் தலைவிரித்தாடத் தொடங்கி விட்டன. அத்துடன் போராட்ட காலங்களில் ஓரளவேனும் மறைந்திருந்த சாதி வெறியும், மத வெறியும் மீண்டும் தலை விரித்தடுக்கின்றன. இதன் பின்னணியில் அரசியல் வாதிகளும், மதத்தலைவர்களும் உள்ளார்கள் என்பது மட்டுமல்லாது சில தமிழ் ஊடகங்களும் தமது நிகழ்ச்சிகளில் தமிழ் மக்கள் மத்தியில் பிரிவினைகளை ஏற்படுத்தும் வகையிலான உரையாடல்கள், நிகழ்ச்சிகளைப் படைத்து வருகிறார்கள் என்பது மிகவும் கவலை தரும் விடயமாகும்.

இவற்றுக்குப் பின்னணியில் இந்திய அரசு, இலங்கை அரசு உள்ளார்கள். அவர்களே தூண்டுகிறார்கள் என அவர்கள் மீது குற்றத்தை சுமத்திவிட்டு, ஈழத்து சமூகத்தினை சேர்ந்த மக்களின் பிரதிநிதிகளே குறிப்பாக அரசியல், சமய, சமூக மற்றும் ஊடக பொறுப்பாளர்களே மக்களிடை பெரும் பிளவுகளை உருவாக்கி வருகிறார்கள் என அவதானிகள் கருதுகிறார்கள்.

ஈழப் போராட்ட காலத்தில் அமைதியாக இருந்தவர்கள் இன்று தமது சுயநலனுக்காக, எம் தமிழின மக்களை பிளவுபடுத்தி வன்முறையினை தோற்றுவித்து வருகிறார்கள். இன விடுதலைக்காக ஒன்றுபட்டு, ஒற்றுமையாக இரத்தம் சிந்தி, உயிர் கொடுத்து, உயிர்காத்து, தியாகங்கள் புரிந்து பல இன்னல்களுக்கும் முகம்கொடுத்து வாழ்ந்த தமிழ் மக்கள் மத்தியில் அவர்களது ஒற்றுமையினைக் குலைத்து சாதி, மத ரீதியாக பிளவுபடுத்தி வருகிறார்கள்.

தற்போது சமூக வலைத்தளங்களும் மிக இலகுவாக தகவல்களை உலக வாழ் மக்களுக்கு காவிச்செல்வதால், வன்முறைகளை தூண்டும் துர்ப்பணிகள் மிக இலகுவாக முன்னெடுக்கப்படுகிறது. மனிதநேயப் பண்புகள் முழுதாய் அற்றுப்போகும் நிலைமை ஈழத்தில் உருவாகி வருகிறது.

இந்த குழப்பகரமான நிலையில் மக்கள் மிகவும் அவதானமாக செயல்பட வேண்டிய கட்டாயம் உள்ளது. குழப்பவாதிகளை இனம் கண்டு அவர்களது மாய வலைகளுக்குள் விழுந்து போகாது வாழ்வை நகர்த்த வேண்டும். இதற்கு தமிழ் ஊடகங்களும் தமது பொறுப்புக்களை உணர்ந்து, நிகழ்ச்சிகளை படைக்க வேண்டும் என்பது எம் தேன் தமிழிதழின் தாழ்மையான வேண்டுகோளாகும். □

தேன் தமிழிதழ்
Ansvarlig redaktør: Julius Antoni
ஆசிரியர்: யூலியஸ் அன்ரனி
தொலைபேசி எண்: (47) 924 63 674
BTA BERGEN TAMILSK AVIS

# Høstens vaksiner mot influensa og korona



**Høsten er på vei, og det er snart tid for å beskytte seg mot influensa- og koronasykdom.**

## Influensavaksine

Fastlegene starter influensavaksineringen i uke 43 (23. til 27. oktober).
Les mer om influensavaksineringen og hvem som er i risikogruppene


## Koronavaksine

Koronavaksineringen starter 2. oktober. Vaksinen er gratis for innbyggere over 65 år og andre personer i risikogruppene som er anbefalt en ny oppfriskningsdose.

Les mer om koronavaksineringen og hvem som er i risikogruppene

(Foto: Vibeke Blich, Bergenkommune)

# Ole Bornemann Bull




வயலின் கலைஞர்- இசையமைப்பாளர் Ole Bornemann Bull மாசி 5ம் நாள் 1810ம் ஆண்டில் நோர்வே பேர்கன் நகரில் பிறந்தார், 1880 ஆவணி 17ம் நாள் இறந்தார். மிகச் சிறந்த வயலின் கலைஞரான இவர் இசையமைப்பாளராகவும் திகழ்ந்தவர்.

நோர்வே நாடகம், நோர்வே நாட்டுப்புற இசை மற்றும் நாட்டுப்புறக் கலை ஆகியவற்றில் மிகவும் ஆர்வம் கொண்டு உழைத்தவர், 1814ஆம் ஆண்டில் டென்மார்க்குடனான கூட்டுறவு கலைக்கப்பட்ட பின்னர், நோர்வேக்கென தனியான கலை, கலாச்சாரம் கட்டமைக்கப்பட முக்கிய பங்கு வகித்தார்.

அவரது படைப்புகளில் Recuerdos de Habana, Et Sæterbøg, Sætergjents søndag, I solsomme stunde மற்றும் Polacca Guerriera ஆகியவை அடங்கும்.

Ole Bull தனது சிறு வயதிலேயே அசாதாரண திறமையைத் தன்னகத்தே கொண்டிருந்தார். அதனை தெளிவாக வெளிப்படுத்தினார். 8வயதில் முதன் முதல் ஒரு வயலினை பெற்றாராம். பேர்கன் கதீட்ரால் பாடசாலை-யின் பழைய மாணவரான Ole Bull 18 வயதில் கலைப்பிரிவு பாடங்களுக்கான பரீட்ச்சை எடுப்பதற்கு ஒஸ்லோ மாநகருக்கு அனுப்பப்பட்டார். இறையியல் கல்வியினை கற்கவிருந்த Ole Bull இசையில் அதிக ஆர்வம் கொண்டதனால் இசை மற்றும் கலைத்துறையினை தேர்வுசெய்து கற்றுக்கொண்டார். பல இசை அறிஞர்களை சந்தித்து இசை நுட்பங்களை அறிந்து கொண்டார். அதன் பின்னர் இசையமைக்கத் தொடங்கினார்.



Gunnar M Sørbø(PhD)



Aloysious Santhiapillai (Social worker)

அருட்பணி அன்புராசா அவர்களின் "அன்புள்ள அரியசிங்க" என்னும் மலர் அறிமுகமும் வெளியீடும் நோர்வே பேர்கன் தமிழ் சங்கத்தின் ஆதரவில் கடந்த 19.செப்டம்பர் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்வுக்கு நூலின் ஆசிரியர் அருட்பணி அன்புராசா அவர்கள் யாழிலிருந்து வருகை தந்து கலந்து கொண்டிருந்தார்.
தமிழ் சங்கத்தின் உபதலைவர் பிளேவியஸ் அமைதி வணக்கத்துடன் வரவேற்புரை வழங்கி, நிகழ்வினை தொகுத்து வழங்க யூலியஸ் அன்ரனி அவர்களை பணித்தார். யூலியஸ் அன்ரனி வணக்கத்துடன் ஆரம்பித்ததும், செல்வி மக்சலா டக்ளஸ் அவர்கள் புல்லாங்குழலில் இனிய இசை மீட்டினார்.

தொடர்ந்து பேர்கன் சித்தி விநாயகர் ஆலய குருக்கள் பிரம்மசிறி ஆனந்தராஜ குருக்கள் ஆசியுரை வழங்கினார்.

நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்ட நோர்வே நாட்டின் முக்கிய சமூக, சமாதான, அரசியல் ஆர்வலரும், முன்னாள் ஊடகவியளா-ளருமான Harry Frøysland மற்றும் CMI - Chr. Michelsen Institute உடைய முன்னாள் அதிபரும், சிறிலங்காவுக்கான சமாதான ஆய்வாளருமான Gunnar Sørbø ஆகியோர் உரையாற்றினார்கள். இவர்கள் இருவருமே சிறிலங்கா அரசியல் மற்றும் அரசின் இறந்தகால நிகழ்கால ஆட்சி முறைமை,


Harry Frøysland (Former Journalist)

தமிழர்களது நிலைமை குறித்து சரித்திர ரீதியான பகிர்வினையையும், அவற்றுக்கு "அன்புள்ள அரியசிங்க" என்னும் நூல் சான்றாகும் எனவும் உரை நிகழ்த்தினர்.

இந்நிகழ்வு இங்கு நடைபெற காரணராகவிருந்த ஆலோசியஸ் சந்தியாப்பிள்ளை அவர்கள் நோர்வே பேர்கனில் இந்த நூலின் அறிமுகம் மற்றும் வெளியீடு மிக முக்கியமானது என தனதுரையில் குறிப்பிட்டார்.


தொடர்ந்து பேர்கன் கத்தோலிக்க ஒன்றிய நிர்வாக தலைவர் அமல்ராஜ், பேர்கன் நகரில் பிறந்து வளர்ந்துவரும் இளையோரான செல்வி கத்லின் ரிச்மண்ட், பேர்கன் மாநகரின் தொழிலாளர் கட்சி துணை உறுப்பினர் செல்வன் ஜெரோன் ஜோசப், பேர்கன் மாநகரசபை உறுப்பினர் வாசன் சிங்காரவேல் ஆகியோர் தமிழிலும் நோர்வேயிய மொழியிலும் சிறந்த விமர்சன உரையினை வழங்கினர்.
நூல் ஆசிரியர் அருட்தந்தை அவர்களும் பேர்கன் தமிழ் சங்க செயலாளர் செரிங்டன் அவர்களும் நன்றியுரை நிகழ்த்தினர்.

# மழை பற்றிய சொற்கள்

-நேதா-

மழை பற்றி எழுதுவதற்கு
மனதிற்குள் அதன் துளிகள்
தேவையாக இருக்கிறது.
மழை பற்றி பாடுவதற்கும்
சொற்களுக்கு அதன்
இரைச்சல் தேவையாக இருக்கிறது.
நீண்ட கோடைக்குப் பின்
ஒரு நல் மழை மனதிற்கு ஈரத்தை
தருகின்றது.
வறண்டு போன என் நிலம்
இப்போது மழையால்
மூச்சுவிட்டுக் கொள்கிறது.
குழந்தைகள் குளிக்கும் போது
குதிப்பதுபோல
நீண்ட நாளுக்குப் பின் பெய்யும்
மழையில்
மரங்கள் குதித்துக்கொள்கின்றன.
இரவில் பெய்யும்
கனமழையை
கட்டி அணைக்க வேண்டும் போல்
இருக்கிறது.
காட்டுத்தீயின் அனலுக்குப்பின் பெய்யும்
இந்த மழை நின்று விடுவதற்குள்
மழை பற்றிய இச் சொற்களை
நீங்களும் படித்துவிடவேண்டும்.

*27.09.2023*




# லயத்துக் கோழிகள் நாடகமும் யாழ்ப்பாணப் பயணமும்

**நெறியாளர் இராசையா லோகானந்தன்**



இந்தப் பயணம், நாடகக்குழு எங்களின் உழைப்புக்குக் கிடைத்த பெரிய அங்கீகாரம் என்றுதான் சொல்ல வேண்டும். எங்களின் பல சந்தேகங்களுக்கும், கேள்விகளுக்கும் இந்த பயணம் தகுந்த பதிலளித்தது.

"உங்கள் சேவல் மட்டுமல்ல எங்களது சேவல்களும் களவாடப்பட்டுதான் இருக்கிறது நாங்களும் வாழ்வை தொலைத்துவிட்டோம்" என்ற ஒத்தக் கருத்துகள் நாடகம் போடப்பட்ட மூன்று இடத்திலிருந்தும் எதிரொலித்தன.

"லயத்துக் கோழிகள்" எளிய மக்களின் வாழ்க்கையை பிரதிபிலிக்கும் நாடகம், இது பிரதேச வரையறைகளைக் கடந்து பொது நோக்குடையது என்பதினை இப்பயணம் அழுத்திச் சொல்லியது.



30.07.2023 அன்று அனலைதீவு அனல் அடித்து கொண்டிருந்த வேளையில் பகல் 1.30 மணியளவில் எங்கள் நாடகம் அங்குள்ளவர்களின் மனதை நெகிழ்ச்சிப்படுத்தியது.

அங்கிருந்த எளிய மக்கள் இந்நாடகத்தின் அரசியல் பற்றிய கருத்துகளை உள்வாங்கவில்லை என்றாலும் ஒரு கலைப்படைப்பை கண்டு இரசித்த திளைப்பை வெளியிட்டார்கள்.

சிறுவர்கள் எங்கள் குழுவினரோடு அளவளாவி இன்பம் கண்டார்கள்.



இளைஞர்கள் எங்களை மனதார நேசித்தார்கள் மீண்டும் மீண்டும் வரவேண்டும் என்று கேட்டு கொண்டார்கள். எங்களோடு செலவிடுவதற்கு நேரம் கிடைக்கவில்லை என்று கவலைப்பட்டார்கள். அவர்களுடைய




பிரச்சினைகள் தொடர்பாகவும் நாடகம் போட முடியுமா என்று கேட்டார்கள். இது குறித்து விரிவாக கலந்துரையாடுவோம் என்று நாங்கள் கூறியிருக்கிறோம். எங்கள் மனம் கோணாமால் மிக உயர்ந்த முறையில் எங்களை உபசரித்தார்கள். ஒரு ஊரே கூடி இந்த 50வது இலக்கியச் சந்திப்புக்காய் தமது பங்களிப்பை நேர்த்தியாக செய்திருந்தமை எளிய மக்களின் கூட்டுணர்வின் பலம் எத்தகைய மாபெரும் சக்தி வாய்ந்தது என்பதை உணர்த்தியது. இவ்விழாவுக்கு எம்மை அழைத்து அங்கீகாரம் அளித்த நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களுக்கும் குறிப்பாக தோழர் தமயந்தி அவர்களுக்கும் இந்த தொடர்பினை ஏற்படுத்தித் தந்த சின்னத்தம்பி மகாலிங்கம் அவர்களுக்கும் நன்றி ??.


31.07.2023 காலையடி பண்டத்தரிப்பு மறுமலர்ச்சி மன்றத்தின் திறந்தவெளி அரங்கில் மாலை 7.00 மணிக்கு லயத்துக் கோழிகள் நாடகம் அரங்கேறியது. கொப்பளிக்கும் காரசாரமான கருத்துகளால் அந்த மண் வீறு கொண்டது. நாடகக் குழுவினர் எங்கள் காரியத்தை பூமியில் முளைக்கவிடும் நடவு பணியாக அதனைக் கொள்ளலாம். உலக அரசியல் வரை கருத்துகள் பரிமாறப்பட்டன. அந்த இடம் என் மனதுக்கு மிக நெருக்கமான இடம் என்பதாலும் அங்கு வந்தவர்களில் பலர் எங்களை உளமார்ந்து உண்மையாய் நேசிக்கும் அன்பானவர்கள் என்பதாலும் நான் ஜூலை 9ம் திகதி எனது சொந்த இடமான கொட்டியாகலை தோட்டத்தில் அடைந்த அதே உணர்வை மீண்டும் பெற்றேன். நன்றி செம்முகம் ஆற்றுகைக் குழு மற்றும் தேசிய கலை இலக்கியப் பேரவை.




Photos: Jenoshan Jeyaratnam

# இலங்கை 75:
# தேசியக்கொடியின் கட்டுக்கதைகள்

தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ



இலங்கையின் தேசிய கீதத்துக்கு எவ்வளவு குழப்பகரமான வரலாறோ அதைவிட மோசடியான வரலாற்றை உடையது தேசியக் கொடி. தேசியக் கொடியின் கதை சொல்கின்ற செய்திகள் பல. அச்செய்திகள் இலங்கை அரசியல் வரலாற்றின் பல பக்கங்களைக் காட்டக் கூடியன. அதேவேளை இலங்கையின் வரலாறு எவ்வாறு கட்டுக்கதைகளால் கட்டமைக்கப்பட்டுள்ளது என்ற உண்மையையும் எமக்குக் காட்டுகிறது. எங்கிருந்து தொடங்குவது என்றே தெரியாதளவுக்கு ஏராளமான கட்டுக்கதைகளும் நிகழ்வுகளும் தேசியக் கொடியின் கதையோடு தொடர்புபட்டுள்ளன. நாம் இந்தக் கதையை இலங்கையின் சுதந்திரத்தோடு தொடங்குவோம்.

இலங்கைக்குச் சுதந்திரம் கிடைப்பதற்கான வாய்ப்புகள் பற்றி 1940களின் நடுப்பகுதியிலேயே பேச்சுக்கள் அடிபடத் தொடங்கின. இந்தப் பின்புலத்தில் சுதந்திர இலங்கையின் தேசிய சின்னங்கள் பற்றிய உரையாடல்கள் தொடங்கின. அதில் முதன்மையான உரையாடல் சுதந்திர இலங்கையின் கொடி பற்றியது. 1945ம் ஆண்டு செப்டெம்பரில் இலங்கையின் சட்டவாக்க சபையில் வரவுசெலவுத் திட்ட விவாதத்தின் போது உரையாற்றிய ஜே.ஆர். ஜெயவர்த்தன பின்வருமாறு சொன்னார்:

> “சிங்கக்கொடியானது இலங்கையின் மூன்று பகுதிகளான ருஹுணு, ரஜரட்ட மற்றும் மயராட்டை மீது ஆதிக்கம் செலுத்தியது. இந்த மஞ்சள் நிற கொடியின் நடுவில் சிங்கம் உள்ளது. இந்தியாவில் அசோகப் பேரரசர் காலத்தில் கட்டப்பட்டதாகக் கூறப்படும் சாஞ்சி ஸ்தூபிக்குச் சென்றீர்களாயின் இலங்கையில் விஜயன் இறங்கும் காட்சியானது கல்லில் செதுக்கியிருப்பதை நீங்கள் காணலாம். அக்காட்சியில் விஜயனின் குழுவில் உள்ள ஒருவன் சிங்கக்கொடியை ஏந்தியிருப்பதைப் பார்க்கலாம். அது 2,100 ஆண்டுகளுக்கு மேல் பழமையானது. இவ்வளவு பழமையான பதிவு செய்யப்பட்ட கொடி உலகில் வேறு எந்த நாட்டிலும் இல்லை என்று நான் நினைக்கிறேன். இவ்வளவு பழமையான அதேவேளை முக்கியமான இந்த சிங்கக்கொடியை அரசாங்கத்தால் செய்யப்படும் எந்த அலங்காரங்களிலும் அதை ஏன் மைய மற்றும் முக்கிய அம்சமாக மாற்றக்கூடாது.”

இந்த உரை மிகவும் முக்கியமானது. மூன்று அம்சங்களுக்காக ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் கூற்றை நாம் கூர்ந்து அவதானிக்க வேண்டும். முதலாவது கண்டி இராச்சியத்திற்கு வெளியே சிங்கள அரசுகள் அமைந்திருந்த பகுதிகளில் சிங்கக்கொடி ஆதிக்கம் செலுத்தியது என்பதன் ஊடு இந்தக் கொடி சிங்களவர்களின் கொடி என்ற கருத்துருத்துவாக்கத்தை உருவாக்குவதனூடு சிங்கக் கொடிக்கான சிங்கள மக்களின் அங்கீகாரத்தை பெற முயல்கிறார்.



இரண்டாவது விஜயனின் வருகையின் போது சிங்கக் கொடி பயன்படுத்தப்பட்டது என்ற கருத்துருவாக்கம் வரலாற்றோடும் தொன்மையோடும் சிங்கக் கொடியை இணைக்கின்ற ஒரு உத்தியாகும். மூன்றாவது முதல் இரண்டின் அடிப்படையில் வரலாற்று நோக்கிலும் அரசியல் அடையாளப்படுத்தலுக்காகவும் சிங்கக் கொடியை அரசாங்கத்தின் முக்கிய சின்னமாக மாற்ற வேண்டும் என்ற அவாவை அவர் வெளிப்படுத்துகிறார்.

இங்கு எழுகின்ற அடிப்படையான வினா, ஜே.ஆர். ஜெயவர்த்தன சொல்கின்ற தகவல்கள் உண்மையானவையா? என்பதாகும். இந்தத் தகவல்களில் எந்தவொரு உண்மையும் கிடையாது, இவை வெறும் கட்டுக்கதைகள் என்பதுதான் இவ்வினாவுக்கான சுருக்கமான பதில். இதனை விரிவாகப் பின்னர் ஆராய்வோம். முக்கியமானது யாதெனில் ஜே.ஆரினால் உருவாக்கப்பட்ட கட்டுக்கதைகள் இலங்கையின் தேசியக் கொடிக்கான வரலாற்று நியாயமாக இன்றும் சொல்லப்படுகின்றன.

1945 முதல் சுதந்திரம் வரையான காலப்பகுதியில் சிங்கக் கொடியைத் தேசியக் கொடியாக அறிவிப்பதற்கான பல முயற்சிகள் நடந்தன. அதற்கான சிங்கக்கொடிக்கான வரலாற்று நியாயங்களைக் கட்டமைக்கத் தொடங்கினார்கள். அதில் முதன்மையானது 1815ம் ஆண்டு கண்டி இராச்சியம் கைப்பற்றப்பட்டபோது கண்டி இராச்சியத்தின் கொடியாக சிங்கக்கொடி இறக்கப்பட்டு பிரித்தானியாவின் கொடி (யூனியன் ஜக்) ஏற்றப்பட்டது என்ற வாதமாகும். இத்தோடு தொடர்புடைய சில வரலாற்று நிகழ்வுகள் உண்டு. அவையும் மிகுந்த ஐயத்துக்கு உரியவை என்றும் கண்டி இராச்சியத்தின் கொடியாக சிங்கக் கொடி இருக்கவில்லை என்றும் பேராசிரியர் கணநாத் ஒபயசேகர ஆய்வுகளின் வழி நிறுவியுள்ளார்.

இலங்கை முழுமையாக சுதந்திரத்தை இழந்தபோது இறக்கப்பட்ட கொடி சிங்கக்கொடியே என்ற கருத்தை வலுப்படுத்தும் விடயங்கள் தொடர்ந்து நடந்து வந்தன. இந்தப் பின்புலத்திலேயே இலங்கைக்குச் சுதந்திரம் கிடைப்பதற்கு சில வாரங்களுக்கு முன்னர் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் முதலியார் அகமட் லெப்பே சின்னலெப்பே பின்வரும் பிரேரணையை முன்மொழிந்து ஒரு மாபெரும் வரலாற்றுத் தவறைச் செய்தார்.

> "ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனின் உத்தியோக முத்திரையான வலது கையில் வாளேந்திய மஞ்சள் நிற சிங்கம் சிவப்பு நிறப் பின்னணியில் இருப்பதான கொடியானது, 1815இல் பிரித்தானியரால் அகற்றப்பட்டது. சுதந்திர இலங்கையின் தேசியக் கொடியாக இக்கொடியையே இந்தச் சபையானது ஏற்றுக் கொள்ள வேண்டும்".

இந்தப் பிரேரணையானது ஜே.ஆர்.ஜெயவர்த்தனவினால் எழுதப்பட்டு சின்னலெப்பேயிடம் கொடுக்கப்பட்டது என்ற கருத்து உண்டு. சின்னலெப்பே ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு 1947இல் வெற்றிபெற்றுப் பாராளுமன்றம் சென்றவர். ஆனால் இவர் 1952ம் ஆண்டு தேர்தலில் படுதோல்வியடைந்தார். குறித்த பிரேரணை ஜே.ஆரினுடையது என்பதற்கான பல ஆதாரங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஜே.ஆர். சிறுபான்மையின பிரதிநிதியின் ஊடாக இப்பிரேரணையை முன்வைத்ததன் மூலம் இது முழு இலங்கையரின் விருப்பம் என்பதை நிறுவ முயன்றார்.

இந்தப் பிரேரணையை வழிமொழிந்தவர்களில் ஒருவர் டி.பி. ஜெயா. இதன் மூலம் இந்தக் கொடி குறித்து முஸ்லீம்களுக்கு எதிர்க்கருத்து இல்லை என்ற எண்ணம் உருவாக வழிவகுக்கப்பட்டது. சின்னலெப்போ போலவே தங்களது தனிப்பட்ட அரசியல் நலன்களுக்காகவே இந்த பிரேரணையை

வழிமொழிந்தார் என்றே கொள்ளப்பட வேண்டியுள்ளது. இதற்கு வழிமொழிந்த மற்றவர் ஏ.ஈ. குணசிங்க, தொழிற்சங்கவாதியாக இருந்தபோதும் அவரது சிறுபான்மையின எதிர்ப்பு நன்கறியப்பட்டது.

இந்தப் பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றிய பிரதமர் டி.எஸ். சேனாநாயக்க "சுதந்திர தினத்தில் கொடி ஏற்றப்படுவதாயின் அது சிங்கக் கொடியாக இருக்க வேண்டும் நாம் எமது நாட்டை இழந்த போது, மக்கள் இங்கிலாந்து மன்னரை இறையாண்மையாகத் தேர்ந்தெடுத்த போது, இறக்கப்பட்ட கொடி இதுவே. இப்போது இங்கிலாந்து இறையாண்மையை இந்தத் தீவின் மக்களுக்கு மீண்டும் தருவதால், அவர்கள் எங்களுக்குத் திருப்பித் தரும் இறையாண்மையுடன் அவர்களின் அந்தக் கொடியை மாற்ற வேண்டும் என்று நான் விரும்புகிறேன். இந்த முக்கிய காரணத்திற்காகவே சுதந்திர தினத்தன்று சிங்கக் கொடியை ஏற்ற திட்டமிட்டுள்ளோம். இந்தக் கொடியை ஏற்றுவதன் மூலம் பிரித்தானியா அவர்கள் இறையாண்மையை எங்களிடம் ஒப்படைத்துவிட்டார்கள் என்பதைக் காட்டுவோம், அதை வெளியில் உள்ள மக்களுக்குத் தெரியப்படுத்துவோம். சுதந்திர தினத்தன்று நாம் ஒரு கொடியை ஏற்ற வேண்டுமானால் அது இந்த சிங்கக் கொடியாக இருக்க வேண்டும், வேறு எந்தக் கொடியாகவும் இருக்கக் கூடாது" என்று சொன்னார்.

பாராளுமன்றத்தில் கடுமையான வாக்குவாதம் இடம்பெற்றது. இடதுசாரிகள் இதை ஏற்றுக் கொள்ளவில்லை. கொடி பொதுவானதாகவும் அனைவருக்கானதாகவும் இருக்க வேண்டும் என்று கோரினார்கள். இதில் கருத்துரைத்த பாராளுமன்ற உறுப்பினர் ஹேர்பேர்ட் ஸ்ரீ நிசங்க "நாங்கள் இப்போது ஒரு புதிய ஆட்சியின் கீழ் இருக்கிறோம். சிங்கக் கொடி சிங்களக் கொடியே தவிர, தேசியக் கொடியல்ல, ஏனைய சமூகத்தினரும் அதற்கு வணக்கம் செலுத்துமாறு கோர முடியாது" என்றார். இவர் பின்னாளில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை நிறுவுவதில் முக்கிய பங்களித்தவர்.



பாராளுமன்றத்தில் பலர் இக்கொடிக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். எஸ்.ஜே.வி. செல்வநாயகம் இக்கொடி தேசியக் கொடி அல்ல என்றும் இது சிங்களக் கொடி என்றும் வாதிட்டார். இவரது கருத்தை கோப்பாய் தொகுதி உறுப்பினர் வன்னியசிங்கம் ஆதரித்தார். இதேவகைப்பட்ட கருத்தையே பண்டாரவளை தொகுதி உறுப்பினர் கே. நடராஜாவுக்கு வலியுறுத்தினார். பல சிங்கள உறுப்பினர்கள் வாளேந்திய சிங்கம் என்பது கண்டி இராச்சியத்தில் பாவிக்கப்பட்ட அரச முத்திரைகளில் ஒன்றேயன்றி அது தேசியக் கொடி இல்லை என்றும் கூறினர். நாட்டின் பல்லினத் தன்மையை பிரதிபலிக்கும் வகையில் புதிய கொடியின் தேவையை எடுத்துரைத்தனர். அனைத்து சமூகத்தினருக்குமான ஒரு கொடி தேவை என்றனர்.

தேசியக் கொடியானது சிங்கம், நந்தி மற்றும் பிறை ஆகியவற்றைக் கொண்டதாக இருக்க வேண்டும் என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டது. இவ்வாறு சிங்கக் கொடியை தேசியக் கொடியாக ஏற்றுவதைத் தடுக்க பாராளுமன்றத்தில் இருந்த முற்போக்கான பிரதிநிதிகள் பலர் போராடிக் கொண்டிருந்தனர். மறுபுறம் சிங்களத் தேசியவாதிகள் இக்கொடியை எப்படியாவது ஏற்றிவிட வேண்டும் என்பதில் குறியாக இருந்தனர். மிகவும் காரசாரமான விவாதம் நடந்து கொண்டிருந்தது. அப்போது கருத்துரைக்க எழுந்த சி. சுந்தரலிங்கம் "கொடியை ஏற்றுங்கள், பிறகு மாற்றுங்கள்" என்று கருத்துரைத்தார்.

இந்தக் கருத்தையும் முஸ்லீம் பிரதிநிதிகள் இப்பிரேரணையை முன்மொழிந்து வழிமொழிந்ததையும் காரணமாகக் காட்டி சிங்களத் தேசியவாதிகள் சிங்கக்கொடியை சுதந்திரத்தின் போது ஏற்றினார்கள். இந்த சுந்தரலிங்கத்தைத் தான் "அடங்காத்தமிழன்" என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

கயவர்களை எம்மத்தியில் வைத்துக்கொண்டு மற்றவர் மீது சுட்டும் விரல் தவிர்ந்த நான்கு விரலும் நம்மைச் சுட்டுகின்றன என்ற உண்மை சுடுகிறது.

# பாதை தவறிய மாங்காய்த் தீவு

Mohamed Ali Yaseer Arafath




சுதந்திரம் முதற்கொண்டு இலங்கையில் சுதேசிகளின் அரசியல் சரியான திசையில் பயணிக்கவில்லை. அப்போது உருவான துவிதமுனைவு உலகில் (Bipolar World) இலங்கையின் தலைமை தனது அரசியல் பொருளாதார சமூக சூழலில் எதைத் தெரிந்தெடுத்து நாட்டை வழிநடத்த வேண்டுமோ அதை செய்யவில்லை.

துங்கு அப்துல் ரகுமான், லீ குவான் யூ ஆகியோர் இந்த விடயத்தில் மிகவும் தெளிவாக இருந்தனர். இலங்கையைப் போல் அவர்கள் பாம்புக்கு வாலும் மீனுக்கு தலையும் காட்டும் இரட்டை வேட அரசியல் செய்து ரோம-பாரசீக காலம் தொட்டே உலகில் என்றும் நிலவி வரும் இந்த பூகோள வலுச்சண்டையில் தங்களின் தலையைக் கொடுக்கவில்லை.

இதன் விளைவாக இலங்கையில் ஒரு நீடித்த நிலைபேறான ஆட்சி உருவாகாமல் ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை மாறும் முரணியக்க அரசியலே இடம்பெற்றது.

இந்த சூத்திரத்திற்குள் பேரினவாதம் தனது நலன்களை முன்னிருத்தி பெருவெற்றி பெற்று தேசத்தை பாழுங்கிணறாக்கி அதன் தவளை ராசாவாக தன்னை முடிசூட்டி சிங்கராஜா தானென்ற Delusion உடன் பாணும் பருப்பும் தினம் தின்று அதோடு திருப்தியடைந்து காலத்தை ஓட்டி வருகிறது.
சுதந்திர காலம் தொட்டே ஒரு ஆட்சி வடக்கே ஐந்து மைல் போக அடுத்த ஆட்சி தெற்கே ஐந்து மைல்கள் கொண்டு வந்து விடும் ஆக தேறிய பயணம் ஆரம்ப புள்ளியில் வந்து நிற்கும்.

இதனாலேயே இலங்கையில் சுதந்திரம் கிடைத்த காலத்தில் விவாதம் செய்த காலத்திற்கு ஒவ்வாத அதே விடயங்களை விழல் விசரர்கள் போல பெரும் வாதாட்டங்கள் மன்றாட்டங்கள் செய்து நவீன உலகம் மாற்றங்களை வெறுமனே மேல்பூச்சாக பூசிக்கொண்டு உள்ளீடுகள் ஆக்காமல் இலக்கற்ற பயணத்தில் ஏறத்தாழ 500,000 மனிதர்களை பலிகொடுத்தும் இரத்த வெறி அடங்காத காட்டேரிகள் போல இந்த தீவை சுற்றி அலைந்து கொண்டிருக்கிறோம்.

அன்று துவிதமுனைவு உலகு இன்று பன்முனைவு உலகாக மாறிவிட்டது. இந்திராவின் காலத்திலிருந்து இந்தியா இந்து சமுத்திரத்தின் மிக முக்கியமான செல்நெறி வடிவமைப்பாளராக மாறி விட்டது.

இந்த மாற்றங்கள் தெளிவாக புரிந்து எதிர்காலத்தில் வரவிருக்கும் தற்போது Protype ஆக இருக்கும் தொழில்நுட்ப கட்டமைப்புகள் மற்றும் தொழிற்பாட்டு களச்சூழலுக்கு ஏற்ப தேசிய பௌதீக கட்டமைப்பு மற்றும் தொழிற்பாடுகளை (National Developmental Physical Eco-System Planning) வடிவமைத்து அதை ஜனரஞ்சகமாக மாற்றத்தெரிந்த அரசியல் கலாச்சாரம் இலங்கையில் உருவாகாதவரை இலங்கையில் இன்னுமின்னும் சாம்பல் மேடுகள் உருவாக்கப்படும்.

# இலங்கை செய்திகளின் தொகுப்பு

**பிற்போடப்பட்டுள்ள காங்கேசன்துறை – நாகப்பட்டினம் கப்பல் சேவை**

இந்தியா - இலங்கையிடையிலான கப்பல் சேவை 10.10.2023 அன்று ஆரம்பமாக இருந்த நிலையில் திடீரென பிற்போடப்பட்டுள்ளது. இந்தியாவின் தமிழகம் நாகப்பட்டினம் - இலங்கையின் காங்கேசன்துறையிடையில் "செரியாபாணி" என்ற பெயரைக் கொண்ட பயணிகள் கப்பல் சேவை ஆரம்பமாக இருந்தது.
இந்நிலையில், தொழில்நுட்ப ரீதியான தடங்கல்கள் காரணமாக கப்பல் சேவை எதிர்வரும் 12ஆம் திகதிக்கு (12.10.2023)இற்கு பிற்போடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

**செரியாபாணி கப்பலின் பரீட்சார்த்த நடவடிக்கைகள் 09.10.2023 அன்று இடம்பெற்றிருந்தது.**

எனினும் தொழிநுட்ப ரீதியான தடங்கல்கள் காரணமாக சேவைகள் நிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் கப்பல்சேவை ஆரம்பிக்கப்பட இருப்பதாக பல ஆண்டுகாலமாக பேச்சுக்கும் செய்திக்கும் சொல்லிக்கொண்டிருந்த வேலை இந்த ஆரம்ப நிகழ்வு தற்போது கைகூடி தற்காலிகமாக அதுவும் இடைநிறுத்தப்பட்டுள்ளது .புதுடெல்லியில் இருந்து கப்பல் சேவையை ஆரம்பிக்க தெரிவு செய்யப்பட்ட துறைமுகத்தில் ஏற்பட்டுள்ள மாற்றமே இந்த தாமதத்திற்கு காரணமாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 29ஆம் திகதி இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான இந்த பயணிகள் கப்பல் சேவை ஆரம்பிக்கப்படவிருந்தது.

தமிழ்நாட்டின் நாகப்பட்டினம் துறைமுகத்தில் வசதிகளை அதிகரிக்க இந்தியா இன்னும் சில நாட்கள் கோரிக்கை விடுத்துள்ளதால், இந்த பயணிகள் கப்பல் சேவையை ஆரம்பிப்பதில் தாமதம் ஏற்படும் என துறைமுக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா இந்திய ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தியா மற்றும் இலங்கை இடையே தொடங்கிய கப்பல் சேவையில் நான்கு மாதங்களில் சுமார் 80,000 சுற்றுலாப் பயணிகள் இந்த சேவையை பயன்படுத்துவார்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது.

கிட்டத்தட்ட 8 வருடங்களுக்கும் மேலாக இந்த கப்பல் போக்குவரத்து தொடர்பில் இலங்கை இந்திய அரசுகள் பேசிக்கொண்டும் நடவடிக்கைகளை முடுக்கி விட்டும் இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது .

**இலங்கைக்கு திருப்பி அனுப்பக் கோரிய சாந்தன் வழக்கு நீதிபதி சுந்தர் மோகன் விலகல்**

இலங்கைக்கு திருப்பி அனுப்பக் கோரி, ராஜீவ் கொலை வழக்கில் விடுதலையான சாந்தன் தாக்கல் செய்த மனு மீதான விசாரணையில் இருந்து நீதிபதி சுந்தர் மோகன் விலகியுள்ளார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் உச்ச நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட ஏழு பேரில் ஒருவரான சாந்தன், இலங்கையை சேர்ந்தவர். அவர் தன்னை இலங்கைக்கு திருப்பி அனுப்பக் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனுவில், இலங்கையில் உள்ள தனது தாயார் உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்டுள்ளதால், உடனிருந்து அவரை கவனித்துக்கொள்ளும் வகையில் திருச்சி முகாமில் இருந்து விடுவித்து இலங்கைக்கு அனுப்ப வேண்டுமென கடந்த மாதம் மனு அளித்ததாக தெரிவித்துள்ளார்.

இந்த மனு மீது நடவடிக்கை எடுக்காத நிலையில் தன்னை இலங்கை அனுப்ப மத்திய, மாநில அரசுகளுக்கு உத்தரவிட வேண்டுமென மனுவில் கோரிக்கை வைத்திருந்தார். இந்த மனு நீதிபதிகள் எஸ்.எஸ்.சுந்தர், சுந்தர் மோகன் அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது, இந்த வழக்கின் விசாரணையில் இருந்து விலகுவதாக நீதிபதி சுந்தர் மோகன் தெரிவித்தார். இதனையடுத்து, இந்த மனுவை வேறு நீதிபதிகள் அமர்வில் பட்டியலிட, தலைமை நீதிபதிக்கு பரிந்துரைக்கப்பட்டது.

## வடக்கு - கிழக்கில் 20 ஆம் திகதி கதவடைப்பு போராட்டம்
## தமிழ்த் தேசிய கட்சிகள் தீர்மானம்

எதிர்வரும் 20-10-2023 ஆம் திகதி வடக்கு - கிழக்கு மாகணங்களில் கதவடைப்பு போராட்டம் நடத்துவதற்குத் தமிழ்த் தேசிய கட்சிகள் தீர்மானம் எடுத்துள்ளன.
முல்லைத்தீவு நீதிபதி விவகாரத்தைக் கண்டித்தும், நீதி கோரியும் கதவடைப்பு போராட்டம் தொடர்பான கூட்டம் யாழ். தந்தை செல்வா கலையரங்கில் 09.10.2023 அன்று நடைபெற்றது.

அரசியல் கட்சிகளுக்கும் பொதுமக்களுக்கும் இடையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலிலேயே, எதிர்வரும் 20 ஆம் திகதி கதவடைப்பு போராட்டம் நடத்தத் தீர்மானித்துள்ளதாக ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார். குறித்த கலந்துரையாடலில் இலங்கை தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் விக்னேஸ்வரன், புளொட் தலைவர் சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எப் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தமிழ்த் தேசிய கட்சியின் தலைவர் சிறீகாந்தா, செயலாளர் சிவாஜிலிங்கம், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன் மற்றும், ரெலோ சார்பில் முன்னாள் தவிசாளர் நிரோசுரோஷ் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

## சர்வதேச விசாரணைகளுக்கு அனுமதி இல்லை ரணில் - பாராட்டிய கோட்டபாய

"இலங்கைக்கு எதிரான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் தீர்மானங்களை அடியோடு நிராகரித்து - சர்வதேச விசாரணைகளுக்கு அனுமதி இல்லை என பகிரங்கமாகத் தெரிவித்துள்ள ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவைப் பாராட்டுகின்றேன்." என முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"ஜனாதிபதிப் பதவியிலிருந்து நான் விலகியபோது புதிய ஜனாதிபதி பதவிக்கு ரணில் விக்ரமசிங்கவைப் பரிந்துரைத்திருந்தேன். அதற்கமைய நாடாளுமன்றம் அவரைப் புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்தது.

ரணில் விக்ரமசிங்க முதுகெலும்பு உள்ள சிறந்த தலைவர் என்பதை அவர் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் நிரூபித்துக் காட்டி வருகின்றார்.

இலங்கை இறைமையுள்ள நாடு. இங்கு வெளிச்சக்திகளின் தலையீடுகளுக்கு இடமில்லை. நாடாளுமன்றத்தை மீறி எவரும் முடிவுகளை எடுக்க முடியாது. நாடாளுமன்றத் தீர்மானங்களுக்கு மதிப்பளித்து ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க செயற்பட்டு வருகின்றார். உண்மையில் அவர் சிறந்த தலைவர்." என தெரிவித்துள்ளார்.



தமயந்தி

## தோற்றுப்போனவனின் நாட்குறிப்பிலிருந்து இரண்டு கவிதைகள்

## இன்னமும் கடலுக்குள்

கண்தொடும் இடமெல்லாம்
மெல்ல மெல்ல இருள் படர்கிறது

அலைகளின் இரைச்சல் மட்டும்
இன்னமும் செவிகளில் உரச
தூரத்தே கரையொதுக்கில்
புதிதாய் முகைவெடித்த
தாழம்பூவின் வாசம்
மூச்சுக்குழாயை முத்தமிடுகிறது.

நீள நெடும் மகிழ்வின்மீது
தாழம்பூ வாசனையை போர்த்திவிடும்
மெல்லிரவின் மேகங்களும்
பூரித்து சிவந்து போவது
காதலால் அல்லால் வேறேதாகும்

கரையேறிய பின்னும்
இன்னமும் நான்
கடலுக்குள்தான்
சயனித்துக் கொண்டிருக்கிறேன்
கடலோ,
என்னை கரையேற்றி
அனுப்பி விட்டதாக
மெய்யற்ற அறிக்கையை வெளியிடுகிறது.
நான் அறிவேன்,
நானின்னமும் கடலுக்குள்தான்.
இது கடலுக்கும் தெரியும்.

## சொல்லிவிட்டுப் போ கடலே!

கடலே!
தூரப் போய்விடு என்னை விட்டு.
உனது அலைகளையும் நுரைகளையும்
கரைகளையும் காற்றையும் அளந்த கால்கள்
களைப்புற்று சோர்ந்து விட்டன

கனவுகளின்
சிற்றிடை வெளிகளையும் விட்டுவைக்காமல்
எல்லாவற்றையும்
நீயே நிரப்பிக் கொள்கிறாய்
எனது கரை நீளம்
கைவீசி நடந்து திரிந்த
தாழம்பூ வாசனையை,
புல்லாந்திக் கிளைகளில் ஒலித்த
ஒற்றைகுயிலின் காதல்ப்பாடல்களை,
களமெலாம் திரிந்த
செம்பவள நாரைகளின் அணிவகுப்பை,
செவ்வாளை தெறித்துப் பாய்ந்த
குடாக் கரையை
மொத்தமும் வடித்தெறிந்து விட்டு
வெறும்
உப்புக் காற்றையும்
உதிர்ந்தழிந்த முருகைகளையும்
எனக்குள்
இரக்கமின்றித் திணித்து விடுகிறாய்

பேய்க்காற்றை இழுத்து வந்து
எனது தொண்டைக்குழியில் புதைத்து
விடுகிறாய்.
கடலே!
உன்னைக் காதலித்ததைத் தவிர
வேறேது குற்றமிழைத்தேன்
சொல்லிவிட்டுப் போ.

# இஸ்ரேலுக்கு எதிராக ஹாமாஸ்(Hamas) மிகப் பெரிய ரொக்கட் தாக்குதல்



கடந்த ஒக்டோபர் ஏழாம் நாளன்று இஸ்ரேலுக்கு எதிராக ஹாமாஸ்(Hamas) மிகப்பெரிய ரொக்கட் தாக்குதலை நடத்தியுள்ளது. ஹாமாஸ் படை வீரர்களும் அந்நாட்டுக்குள் புகுந்துள்ளனர். ஹாமாஸ் இத்தாக்குதலை «al-Aqsa Flood» என்று பெயரிட்டுள்ளனர். தாக்குதலில் மூவர் கொல்லப்பட்டும் பலர் காயமடைந்தும் உள்ளனர்.

இஸ்ரேல் இப்போது எதிர் தாக்குதல்களை நடத்தி வருகிறது. நாடு யுத்த சூழ்நிலையில் இருப்பதாக பாதுகாப்பு அமைச்சர் அறிவித்துள்ளார். இஸ்ரேலில் குறைந்தபட்சம் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார் மற்றும் பல நூறு பேர் காயமடைந்துள்ளதாக கூறப்படுகிறது.

காஸா பகுதியில் இஸ்ரேல் நடத்திய பதில் தாக்குதலில் இரண்டு பாலஸ்தீன இளைஞர்கள் கொல்லப்பட்டனர்.
ஹமாஸின் தாக்குதல்களை நோர்வே கடுமையாக கண்டிப்பதாக அறிக்கை விடுத்துள்ளது. இஸ்ரேலிய குடிமக்கள் மீதான தாக்குதல்களை நோர்வே கடுமையாக கண்டிக்கிறது. தாக்குதல்கள் மற்றும் வன்முறைச் செயல்களை உடனடியாக நிறுத்துமாறு அழைப்பு விடுக்கிறது என்று வெளியுறவு அமைச்சர் Anniken Huidtfeldt NRK செய்தி ஊடகத்துக்கு அளித்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அதேவேளை யுத்த பிரதேசத்தில் பல நோர்வே நாட்டு மக்கள் வாழ்வதனால், அவர்கள் உள்ளூர் அதிகாரிகளின் அறிவுரைகளைக் கேட்டுப் பின்பற்றவும், அவர்களின் நிலைமையைப் பற்றி வீட்டில் அவர்களுக்குத் தெரிவிக்கவும் அப்பகுதியில் உள்ள நோர்வே மக்களை கேட்டுக்கொண்டுள்ளனர்.

மேலும், வெளியுறவு அமைச்சகம் அப்பகுதியில் உள்ள நோர்வேஜியர்களை Reiseklar செயலியில் அல்லது reiseregistrering.no இல் பதிவு செய்ய வேண்டுமென பணித்துள்ளது.




**யூலியஸ் அன்ரனி**

தமிழ் தொன்மையை உலகளவில் கடல் வழியாகத் தேடி பல ஆய்வுகளை புரிந்த ஒரிசா பாலு என்ற சிவ பாலசுப்பிரமணி மரணத்தை தழுவிக்கொண்ண்டார். திருச்சி உறையூரில் பிறந்து, தமிழகத்தின் விழுப்புரம், புதுவை, நெய்வேலி, சென்னை போன்ற இடங்களில் வளர்ந்து இயற்பியலில் தேர்ச்சி பெற்றார். சுரங்கம் மற்றும் வெளிநாட்டுக் கருவிகளை பழுது பார்க்கும் வேலைகள் தொடர்பான பொறியியல் துறையில் பல ஆண்டுகள் ஒரிசாவில் பணிபுரிந்து, இந்தியா முழுவதும் கடல் வழி சுற்றி வந்தவர். தமிழர்களின் கடல்சார்தொன்மை தொடர்பான ஆய்வுகளை தொடர்ந்து செய்து வந்தார்.

ஆர். ஏ. ஆர். என்ற பன்னாட்டு நிறுவனத்தில் உயிரி மருந்தியல் மற்றும் மாற்று எரி பொருள் துறையில் இயக்குநராக பணிபுரிந்து வந்தார். ஒருங்கிணைந்த பெருங்கடல் பண்பாட்டு ஆய்வு நடுவத்தை நடத்தி வந்தார். ஒரிசாவில் கனிம வளக் கண்டுபிடிப்பு ஆய்விற்காக அவுஸ்திரேலிய புவி இயற்பியல் நிறுவனத்தின் செய்மதிகளின் உதவியுடன் விமான மூலமான ஆய்வுகளில் தேர்ச்சி பெற்று அந்த ஆய்வுகளைக் கள ஆய்வுகளின் மூலம் உறுதி செய்யும் குழுவில் பணி புரிந்தவர்.

**உலக தமிழ் அமைப்புகளை ஒன்று சேர்க்க ஆர்வம் காட்டியவர்.**

கலிங்க தமிழ் தொடர்புகள், தமிழ் - கலிங்க தென் கோசல, ஒட்டர தொடர்பான தமிழியல் ஆய்வுகளை மேற்கொண்டார்.

அதே போல் இனப்பெருக்கத்திற்கு தமிழக, ஒரிசா கடற்கரைகளுக்கு வரும் கடல் ஆமைகள் தொடர்பான இடங்கள் பிற்காலத்தில் துறைமுகங்களாக மாற்றப்பட்டதையும், ஆமைகள் தம் கடற்கரைகளை தேடி கடல் நீரோட்டத்தில் வரும் வழிகளை பின்பற்றியே தமிழ் கடலோடிகள் உலகம் முழுவதையும் வலம் வந்தனர் என்ற ஆய்வுக் கருத்தையும் முன்வைத்தார்.



ஆமைகள் தொடர்பான இடங்கள் நான்கு ஆயிரத்திற்கு மேற்பட்டு தமிழ் பெயராலேயே விளங்குவதை ஆய்வுகள் செய்து உறுதி செய்து வந்தார். அந்த இடங்களில் தமிழ் மொழி மற்றும் பண்பாடுகள் இன்றும் இருப்பதை நிருபித்து வந்தார்.

கடலோடிகளை, மீனவர்களை பாய் மரத்தில் மீன்பிடிப்பவர்களாக மட்டும் பார்க்காமல் கடல் சுற்று சூழல் அறிவு பெற்றவர்களாக பார்த்தார். கடல் வள மேலாண்மையின் உலக நடப்புகளை மீனவர்களுக்கு பயிற்சி தந்து வந்தார்.

தமிழர்கள் கடல் சார் மரபு மற்றும் சுற்றுச் சூழலை காக்க வேண்டி, தமிழகம் முழுவதும் காணொளி காட்சிகள் நடத்தியும், முகநூல் மூலமாகவும் விழிப்புணர்வு செய்து வந்தார்.



கடலார் என்ற மீனவர்கள் சார்ந்த மாத இதழுக்கு ஆலோசகராக பணிபுரிந்தார். மீன் வளம், பாய்மரக் கப்பல், நீர்மூழ்கிகள், மானுடவியல், விலங்கு மற்றும் தாவரம், கடல் சார் தொல்லியல், வரலாறு, பண்பாடுகள், ஆமைகள் பற்றிய ஆய்வு,

பாறை ஓவியங்கள், இயற்கை சார்ந்த புவி சுழற்சி தொடர்பாக செய்மதி குழுமம், கடல் சார் குழுமம் மற்றும் ஏனைய அமைப்புகளில் உறுப்பினராக இருந்தார்.

இறுதிக் காலத்தில் சென்னையில் வசித்து வந்த இவர் ஒருங்கிணைந்த பெருங்கடல் பண்பாட்டு ஆய்வு நடுவத்தை துவங்கி உலக மக்களுக்கு தமிழருடைய தீபகற்ப கடல் சார் மேலாண்மை தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்த இயங்கி வந்தார். ■




Dr.விமலநாதன் MD PhD
(Senior Consultant Cardiologist, Oslo, Norway)

## உடல்நல ஆலோசனை

கடந்த இதழ்களில் புலம்பெயர் வாழ் மக்கள் எதிர்கொள்ளும் அன்றாட சவால்கள் மற்றும் உள ரீதியான, உடல் ரீதியான தாக்கங்கள் பற்றி தெளிவாக தந்தமைக்கு மிகவும் நன்றிகள்.
கோடை கால விடுமுறையில் நாங்கள் எமது தாய் நாட்டுக்கு செல்லவிருக்கின்றோம். கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக நோர்வேயில் வசித்து வந்துள்ளோம். அத்துடன் இங்கு நோர்வேயில் பிறந்த 10, 12 வயதுடைய எனது இரண்டு பிள்ளைகளையும் அழைத்து செல்லுகின்றோம். எமது பயணத்தின் போதும், அங்கு கழிக்கவிருக்கும் 4 வாரங்களும் நாம் பொதுவான நோயில்லாமல் வாழ உங்கள் ஆலோசனைகள் தர முடியுமா?

முதலில் பிள்ளைகளையும் அழைத்துக்கொண்டு தாயகம் செல்ல திட்டமிடுவது வரவேற்கத்தக்கதும், பாராட்டுக்குரியதுமாகும். பிற நாடு, பிற மொழி, பிற கலாச்சாரத்துள் வாழும் பிள்ளைகள் பெரும்பாலும் தம்மை இந்நாட்டுப் பிரசைகளாகவே அடையாளப்படுத்திக் கொள்கிறார்கள். அவர்களது பூர்வீகத்தை சரிவர புரியவைப்பது தங்களது அடையாளம் தொடர்பாக எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய சந்தேகங்களை தவிர்க்கவும், தீர்க்கவும் உதவியாகவிருக்கும். ஆனால் இவ்வாறான பயணங்கள் வெற்றிகரமாக அமைய வேண்டுமானால் பிள்ளைகளுக்கு அது ஒரு நல்ல அனுபவமாக இருக்க வேண்டும். அடுத்த விடுமுறைக்கும் எங்களை அங்கே அழைத்துச் செல்லுங்கள் என ஒற்றைக்காலில் நிற்கவேண்டும்.
வளர்ந்தவர்களாகிய எமக்கு எமது இளமைக்காலங்களை மீட்பது, நண்பர்கள், உறவினர்களை சந்திப்பது, ஆலயங்களை தரிசிப்பதென பல அவாக்களும், மனதிற்கு திருப்திதரும் விடயங்களும் நிறைந்திருக்கும். ஆனால் எமது பிள்ளைகளுக்கு அப்படி இருக்கவேண்டுமென்றில்லை. எனவே அவர்களும் விடுமுறையை நன்கு அனுபவிக்கும் வண்ணம் பயணத்தை திட்டமிடவேண்டும். கவனத்தில் எடுக்கவேண்டிய விடயங்கள் பற்றி சில ஆலோசனைகள்,

### 1. தோல் வருத்தங்கள்

அதிக வெப்பநிலையாலும் வியர்வையாலும் உடலில் பருக்கள் போடலாம். இவ்வாறு நிகழ்ந்தால், காலையும், மாலையும் குளித்து உடலை குளிர்மையாக வைத்துக்கொள்ளுவது, மெல்லிய, புழுக்கமில்லாத ஆடைகளை அணிவது, நேரடி சூரியஒளியை தவிர்த்துக்கொள்வது நலம்.
பூச்சி புழுக்கள் கடிப்பதால் சிறு புண்கள் சொறி போன்றவை ஏற்படலாம். முதலில் காரணத்தைக் கண்டறிந்து அவற்றிடமிருந்து விலகியிருக்க வேண்டும். வைத்திய உதவியை நாடி அவற்றுக்கான மருந்துகளை பெற்றுக்கொள்ள வேண்டும்.
நுளம்புக்கடியிலிருந்து பாதுகாத்துக் கொள்ள வேண்டும். நுளம்புவலை பாவித்தல், இங்கிருந்து கொண்டு செல்லக்கூடிய உடலில் பூசும் மருந்துகளை பாவித்தல். உறங்கும் போது உடலை மூடக்கூடிய ஆடைகளை அணிந்து துாங்குதல் நலம்.

## 2. உணவால் ஏற்படக்கூடிய உபாதைகள்

பழைய கெட்டுப்போன உணவுகள், பழவகைகள், தூய்மையாக தயாரிக்கப்படாத உணவுகள், பானங்களிலிருந்து இலகுவில் தொற்று ஏற்படுவதால் வயிற்றோட்டம், வாந்தி போன்றவை பயணங்களுக்கு இடையூறாக அமைவதோடு, உடலில் நீரபற்றாக்குறையையும், வரட்டுத் தன்மையையும் ஏற்படுத்தும். எனவே சுகாதாரக் குறைவான உணவருந்துவதை தவிர்ப்பது. பழுதடைந்ததென சந்தேகிக்கும் உணவுகளை உண்ணாமல் தவிர்ப்பது. குளிர்மையான உணவுகளையும், பானங்களையும் உட்கொள்வது அவசியம். தவிரவும், இலங்கையில் மலேரியா, டெங்கு போன்ற தொற்றுநோய்கள் காலத்திற்கு காலம் பரவிவருவதுண்டு முடிந்தால் அவ்வாறான இடங்களுக்கு செல்வதை தவிர்த்துக் கொள்ளலாம்.

இங்கிருந்து புறப்படுவதற்கு முன்பு இங்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ள தடுப்பூசிகளை போட்டுக்கொள்ளுவதும், தேவையான தடுப்பு உபகரணங்களை எடுத்துச் செல்வதும் நலம்.
இவை, நீங்கள் கேட்ட கேள்விக்கான பதில்கள் சில. இந்த அறிவுரைகள் உங்கள் விடுமுறையை மேலும் செழிப்புறச் செய்யவேண்டுமே தவிர பயத்தில் தாயகம் செல்லாமல்விடவோ, அல்லது அங்கு சென்று வீட்டிற்குள் முடங்கிக்கிடக்கவோ வழிசமைக்கக்கூடாது. முடிந்தவரை உங்கள் குழந்தைகள் அங்குள்ள உறவுகளுடனும், சூழலுடனும் உரிமையுடன் உறவுகளை வளர்த்து வரவேண்டும்.
உங்கள் விடுமுறை இனிதே அமைய வாழ்த்துகள்.

இவற்றைப் பின்பற்றாமை போன்றவற்றை நலவாழ்வு பாதிப்படைவதற்கான காரணங்களாக குறிப்பிடலாம். அத்துடன், உளவியல் தாக்கங்களையும் குறிப்பிட்டாக வேண்டும் இளவயதில் வீட்டிற்கும், நாட்டிற்கும் புலம்பெயர்ந்தவர்களின் உழைப்பும் பங்களிப்பும் உயிர்நாடியாக இருந்தபோது அவர்கள் கதாநாயகன், கதாநாயகிகளாக பார்க்கப்பட்டார்கள். தாயகக்கனவு சிதைந்து போனதும், குடும்பமட்டத்தில் இவர்களின் முக்கியத்துவம் குறைந்து போய்க்கொண்டிருப்பதும், பொருளாதாரத்தை மையப்படுத்திய இயந்திர வாழ்வில் கணவன் - மனைவி உறவில் ஏற்படுகின்ற விரிசல், இருவேறுபட்ட கலாச்சாரத்தில் வளருகின்ற இரண்டாம் தலை முறையினருடன் எழுந்துவருகின்ற முரண்கள், முதுமைபற்றிய கேள்விகள் எனபன தொடர்ச்சியான மனஉளைச்சலுக்கு காரணங்களாக நீடிக்கின்றன.

வளமான மருத்துவவசதிகளையுடைய மேற்கத்தைய நாடுகளில் இவ்வாறான நிலமைகள் சாத்தியமா என்னும் கேள்வி எழுவது நியாயமானதே. மேற்கத்தைய நாடுகளில் குடியேறி வாழ்ந்துவரும் வெளிநாட்டவர்களிடம் கடந்தகாலங்களில் மேற்கொள்ளப்பட்ட மருத்தவ ஆய்வுகள் அனைத்துமே சொந்தநாட்டு மக்களின் நலவாழ்விலும் பார்க்க வெளிநாடுகளிலிருந்துவந்து குடியேறிவாழும் மக்களின் நலவாழ்வு மிகவும் தாழ்ந்தநிலையிலேயே இருப்பதைக்காட்டி நிற்கின்றன.

உலக சுகாதார அமைப்பின் அறிக்கைகளின்படி வெளிநாட்டவர் என்ற பாகுபாடு, குறைந்த வாழ்க்கைத்தரம், தரக்குறைவான வேலைகள், தரக்குறைவான வீட்டு வசதிகள், போதிய மருத்துவவசதிகளை பெறுவதற்கான வாய்ப்புக்களின்மை அல்லது அவை சட்டரீதியாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளமை என பல காரணங்கள் கூறப்பட்டள்ளது. ஆனாலும் இவற்றுடன் ஈழத்தமிழர்களுக்கே பிரத்தியேகமான யுத்தம், குடும்பப்பொறுப்பு, கடினஉழைப்பு என்பனவும் எம்மை இளவயதிலேயே நோயாளர்களாக்க உதவியுள்ளது என்றால் மிகையல்ல.




நேமி...! ஆழிக்கடவுளின் மும்முனைக் குத்தீட்டியினதும், கடலினதும், கடலடிக் கரும் பாறைகளினதும், காரான் சுழியினதுமான அங்கங்களிலிருந்து அவதாரமெடுத்த பெண் வேளா.அவள் ஒரு அள்ளுகொள்ளை கறுப்பழகி. அலைகளை, அலைகள் உருட்டிவிட்ட நுரைகளை கைகளாய் அள்ளியெறிந்து விளையாடும் கடற்புறா. கரையேறும் பேரலைகளை கால்களால் தடுத்து நிறுத்தும் றாங்கிக்காரி.
சூரியனிலிருந்து கண்களையும், நிலவிலிருந்து உடலையும், நட்சத்திரங்களிடமிருந்து அழகிய புன்னகையையும், மின்னல் கண்டு பூக்கும் தாழம் பூக்களிலிருந்து புறப்படும் திவ்விய வாசனையையும், கடலிடமிருந்து பேரலை சீரலை போன்ற வார்த்தைகளையும், ஏழாற்றுப் பிரிவிடையிருந்து நாவுக்கினிய பாலைப்பழச் சுவை போன்ற பாடல்களையும் மொத்தமாக அள்ளியெடுத்துக் கொண்டு பூமிக்கு வந்து உலவித் திரியும் ஒரு அனாமதேயத் தேவதை.

நீண்ட காலமாகவே நங்கூரம் தூக்கப்படாத எனது சிறுபடகில் நான் செக்கல் மைமலில் அமர்ந்திருந்த போதுதான் சுரி-வில் குடாக்கரையில் அவள் உலவுவதைக் கண்டேன். கையிலொரு பட்டை தீட்டிய ஐவிரல் வெண்சங்கை ஏந்தியபடி சூரியனோடு எதையோ பேசிக்கொண்டு களக்கடலில் நின்றாள். எனது சனத்துக்கான ஏதோவோர் நற்செய்தியை அவள் தனது மடியில் சுமந்து வந்திருப்பதாகவே அடையாளம் கண்டு கொண்டேன். குடாக்கரையின் பெருமணற் பரப்பில் உலாத்தித் திரிந்த அவள் எனது பாசி மண்டிய படகருகே வந்து நின்றாள். மிக அருகில் அவளைத் தரிசித்தேன். அதிர்ச்சி....! பேரதிர்ச்சி!!



தர்சிஷி. தோழி தர்ஷி.... யுத்த களத்தில் எதிரிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட களப்படப்பிடிப்பாளி தோழி தர்ஷி. பெரும் பெரும் சிக்கல்கள் நிறைந்த, அதியுச்ச ஆபத்தான யுத்த களங்களையெல்லாம் தனது கமெராவுக்குள் சிறைப்பிடித்து உலகத்துக்குக் காட்டிய யுத்த நெருப்பு. என்றென்றைக்குமாக எனது நெஞ்சாங்கூட்டுக்குள் ஆசனம் கட்டி அமர்ந்திருக்கும் கருவம் கொண்ட முரட்டுப் போராளி.
ஆம், களத்தில் கொல்லப்பட்ட தோழி தர்ஷியின் முகச்சாயலை அச்சுக் குலையாமல் அப்படியே ஒத்திருந்தாள். எனது படகின் அருகில் மெல்ல மெல்ல வந்தவள் தனது கையில் கொண்டுவந்த அந்த ஐவிரல் வெண்சங்கை என்னை நோக்கி நீட்டினாள். வாங்கிக் கொண்டேன். தந்துவிட்டு அவள் அகன்று தூரச் சென்றாள்.

அவள் சென்ற வழியெல்லாம் தாழம்பூவின் வாசனை விரவி, காற்றிலும் கடலிலுமாகக் கலந்து கிறங்கடித்தது. என்னிடம் எந்தவித அனுமதியும் கேட்காமலேயே எனது கால்கள் தோணியை விட்டுக் கடலில் இறங்கி அவள் பின்னால் என்னைச் சுமந்து சென்றன.

கோட்டான்பிட்டி முனங்கின் வெண்மணற் கரையில் சடைத்து நின்ற தாழை மரத்தின் நிழலில் அமர்ந்து கொண்டாள். பள்ளிச்சிறுவன் தன் ஆசானின் முன்னால் நின்றதுபோல் அவள் முன்னால் போய் நின்றேன். அருகில் அமரும்படி கண்களால் சைகை காட்டினாள். அமர்ந்து கொண்டேன். கணங்கள் பல கடந்தும் இருவரும் மவுனமாகவே இருந்தோம்.

தாழம் பற்றைக்குள்ளிருந்து காட்டுக்கோழிகள் இரண்டு சிறகுகளால் புறுபுறுத்தபடி பறந்து சென்றன. அந்த சிறகுகளின் படபட சத்தத்தில் எனது மவுனமும் கலைக்கப் பட்டதாயிற்று.
“யார் நீ” என்றேன். “நேமி” என்றாள்.
“ஊரெது” என்றேன். “சொந்தவூர் இந்தவூர்” என்றாள்.
“கண்டிலேனே பெண்ணே இதுகாறும் உன்னை” என்றேன்
“கடலை சரிவர அறிந்திராத நீ என்னையும் அறிய முகாந்திரம் இல்லை” என்றாள்.
மீண்டும் மவுனமாகினேன். அவளும்தான்.
அவளிலிருந்து புறப்பட்டுவரும் தாழம்பூ வாசனையோ எங்கள் இருவரையும் சுற்றி சக்கர வியூகம் அமைத்திருந்தது.
அந்த வியூகத்துக்குள் இருவரும் சுற்றிவளைக்கப் பட்டிருந்தோம்.

சற்று நொடி தள்ளி,
“நீ யார்...?” என்றாள்.
“நான் தங்கராசு” என்றேன்.
“அது தெரியும், பெயரைக் கேட்கவில்லை நான்...., இங்கே இப்போ நீ யார்” எனச் சிரித்தபடியே கேட்டாள்.
என்னவென்பேன் நான்...? காலாவதியாகிப்போன கடலோடியா, கடலைச் சுற்றிப் பார்க்க வந்த உல்லாசியா, அல்லது எல்லாம் இழந்தும் ஐரோப்பிய முகப் பூச்சோடு உலவும் ஒரு அகதியா...? இதற்கெல்லாம் விடை என்னிடமே இல்லையே இவளுக்கு எதைச் சொல்வேன்...?

மீண்டும் சிரித்தபடி சொன்னாள் “நீ அதிகம் யோசிக்காதே குழம்பி விடுவாய். இது உனக்கு மட்டுமான குழப்பமில்லை, யுத்த தேசத்தை விட்டு தேசம் கடந்து அகன்று போனவர்கள் பலரிடமும் உள்ள குழப்பம்தான். சரி நடப்போம் வருவாயா கரை நீளமாக” என்றாள்.
கணம் சிலகூடத் தாமதியாது கரைமணல் விட்டு எழுந்தேன். அவளும் எழுந்தாள். இருவரும் ஏழாற்றுப் பிரிவின் அலைகள் வந்து களைப்பாறும் வெண்மணற் கரை நீளம் நடக்கத் தொடங்கினோம். எங்களோடு கூடவே மவுனமும் நடந்து வரலாயிற்று. அதேவேளை கரையேறும் ஏழாற்றுப் பிரிவின் அலைகளின் இரைச்சல் எங்கள் இருவரின் மவுனங்களின் நடுவில் ஊரி முனையால் மணலில் மெல்லிய கோடு போட்டதுபோல் ரிதம் வாசித்துக் கொண்டிருந்தது.

நேமி, தர்ஷி....!
இவள் கடலாள் நேமியா அல்லது எனது அளப்பரிய நேசத்துக்குப் பாதிரமான தோழி தர்ஷியா...? எப்போதும்போலவே எல்லாவற்றின் மீதான சந்தேகங்களோடு அவளோடுகூட கரை நீளம் நடக்கலாகினேன். இப்போது கடலலைகள் எந்தவித அழிச்சாட்டியமும் இல்லாமல் சீரணச் சிறுவர்கள் போல் தம்மை ஒழுங்கமைத்துக் கொண்டன.
இங்கிதம் தெரிந்த அலைகள். காலநேரம் புரிந்துகொண்ட அலைகள்.

**தொடரும்....**

# வரலாற்று முக்கியத்துவம் மிக்க பச்சிலைப்பள்ளியின் சிறப்பு அடையாளங்களில் ஒன்று



-கருணாகரன்.

வரலாற்று முக்கியத்துவம் மிக்க பச்சிலைப்பள்ளியின் சிறப்பு அடையாளங்களில் ஒன்று, அதனுடைய இயற்கை வளமாகும். இன்னொரு வகையாகச் சொன்னால், இந்த இயற்கை வளமே பச்சிலைப்பள்ளியைத் தனித்துச் சிறப்பாக இனங்காட்டுகிறது. மிக நீண்ட காலமாக - ஆயிரமாண்டுகளாக - மக்கள் வாழ்ந்து வருகின்ற பிரதேசமாக இருப்பதற்கு இங்குள்ள இயற்கை அரணும் இயற்கை வளங்களும் பயன்பட்டுள்ளது.

தொல்மக்களின் வாழ்க்கை பெருமளவுக்கும் இயற்கையோடு இணைந்திருந்தது. அந்த வாழ்க்கைக்கு இயைபாக இருக்கும் அமைவிடங்களையே அவர்கள் தெரிவு செய்தனர். அல்லது, இயற்கையில் பெறக்கூடியவற்றை அடிப்படையாகக் கொண்டு தமது வாழ்க்கையை அமைத்துக் கொண்டனர். நீரை இலகுவாகப் பெறக்கூடிய, விவசாயத்தையும் வேட்டையையும் செய்யக் கூடிய இடங்களே அன்றைய மனிதர்களின் வாழ்க்கைத் தெரிவாக இருந்தது.

இப்பொழுது நாம் நகரங்களை நோக்கி, அங்கே கிடைக்கக் கூடிய வளமான கல்வி, உயர் மருத்துவம், சிறப்பான வணிகம், உத்தியோக வாய்ப்புகள் மற்றும் தொழில் நுட்பத்தின் வழியான தொழில்துறைகள் இவற்றின் மூலமாகக் கிடைக்கும் வசதியான வாழ்க்கையை நோக்கி ஓடுகிறோம். அன்றைய நிலவரம் வேறு.

அன்று இப்போதுள்ளதைப்போல தொழில் நுட்பம் வளர்ச்சியடைந்திருக்கவில்லை. விவசாயமும் கடற்றொழிலும் பனைத் தொழிலுமே அன்றைய வாழ்க்கைக்கு ஆதாரமாக இருந்தன. இதனால் தண்ணீரை இலகுவாகப் பெறக்கூடிய ஆறுகள், குளங்கள் அதிகமாக இருந்த இடங்களையே தெரிவு செய்தனர். ஆற்றங்கரை நாகரீகம் உணர்த்துவது இந்த உண்மையையே. அல்லது கடலை அண்மித்த பகுதிகளில் குடியிருந்தனர். எப்படியோ நீரே வாழ்க்கையின் ஆதாரமாக இருந்தது.

பச்சிலைப்பள்ளிப் பிரதேசம், "நெய்தல்" "மருதம்" "முல்லை" என்ற மூன்று வகையான நில அமைவைக் கொண்டது. முக்கியமாக நீரை இலகுவில் பெறக்கூடிய மணல்நிலம் பச்சிலைப்பள்ளியினுடையது. இதனால் இங்கே மக்கள் குடியேறினர்.

நீண்டகாலமாக மக்களின் இருப்பிடமாக இருந்தபடியால் பச்சிலைப்பள்ளிக்குரிய வரலாற்றுச் சுவடுகளும் உண்டு. முகமாலை, அரசர்கேணி, கிளாலி, தம்பகாமம், முகாவில், மாசார், இயக்கச்சி ஆகிய பிரதேசங்கள் வரலாற்றுச் சிறப்புக்குரியன. இங்கெல்லாம் வரலாற்றுச் சுவடுகளாகக் கருதப்படும் புராதன கோயில்கள்,



கட்டிடங்கள், கோட்டைகள் ஆகியவற்றையும் அவற்றின் எச்சங்களையும் இன்றும் காண முடியும். ஆனால், நாட்டில் ஏற்பட்ட யுத்தம், இந்தப் பிரதேசத்தை பெருமளவுக்கும் அழித்தது. ஆனையிறவு, இயக்கச்சி, முகமாலை, கிளாலி ஆகிய இடங்களில் நடந்த பெரும்போர்கள் இந்தப் பிரதேசத்தின் இருப்புக்குப் பெரும் சவாலாகியது.

ஏறக்குறைய இருபது ஆண்டுகளுக்கு மேலாக இந்தப்பிரதேசத்திலிருந்த மக்களை முற்றாகவே வெளியேற்றியது. பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக தொடர்ச்சியறாமல் வாழ்ந்து வந்த மக்கள், இடம்பெயர்ந்து சிதறிப்போனார்கள். அந்த வெளியேற்றம் இந்த மக்களின் வாழ்க்கையிலும் அவர்களுடைய பண்பாட்டிலும் ஆழமான எதிர்த்தாக்கத்தை உண்டாக்கியது.
இங்கே நடந்த இயற்கை அழிவு சாதாரணமானதல்ல. லட்சக்கணக்கான பனைகளையும் தென்னைகளையும் அழித்தது. காடுகளும் வெளிகளும் கூடப் பற்றி எரிந்தன. இதனால் இந்தப்பிரதேசத்தின் நிலக்காட்சியே மாறியது.


யுத்தம் முடிந்த பின்பு காணப்பட்ட இந்தப் பிரதேசத்தின் காட்சிகள் இதற்குச் சான்று. பல்லாயிரக்கணக்கான மொட்டைப் பனைகளும் தென்னைகளும் இந்தச் சனங்களின் வாழ்க்கைக்கு ஆழமான குறியீடுகளாகியது. பிக்காஸோவின் குவார்னிகா ஓவியத்தைப் பிரதிபலிப்பதாக பச்சிலைப்பள்ளி மாறியிருந்தது.
அதனுடைய பசுமைச் சூழல் பாதிக்கும் மேலே காணாமற் போயிருந்தது.

ஆனாலும் இயற்கை எதையும் சமனிலைப்படுத்தி விடும் என்பதற்கிணங்க வடலிகள் வளர்ந்தன. காடுகள் துளிரெறிந்து செழிக்கத் தொடங்கின. மக்களும் மெல்ல மெல்லத் தங்களுடைய ஊர்களுக்கு வரத் தொடங்கினார்கள். மீள்குடியேற்ற நடவடிக்கைகள் பச்சிலைப்பள்ளியை உயிர்ப்பூட்டியது.
ஆனால், இந்தச் சந்தர்ப்பத்தில் பச்சிலைப்பள்ளியை மீளுருவாக்கம் செய்யும் திட்டங்கள் ஆழமான பிரக்ஞையோடு முன்னெடுக்கப்படவில்லை.

இது பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்துக்கு மட்டும் நேர்ந்த துயரம் மட்டுமல்ல. எல்லா மீள்குடியேற்றப் பிரதேசங்களுக்கும் நடந்துள்ள தவறே. முற்றாகவே மக்கள் வெளியேறி யுத்தம் நடந்த பிரதேசங்களில் மீள் குடியேற்ற நடவடிக்கைகள் என்பது, அந்தப்பிரதேசங்களின் வரலாற்றுத் தொடர்ச்சியோடும் சூழல் பாதுகாப்போடும் முன்னெடுக்கப்பட்டிருக்க வேண்டும். அதற்கமையவே திட்டமிடல் அமைந்திருக்க வேண்டும். இந்தத் திட்டமிடலின்போது வரலாற்றாசிரியர்கள், சூழலியலாளர்கள், பண்பாட்டாளர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள், பிரதேசங்களின் மூத்த - இளைய பிரஜைகள் அடங்கிய குழுவோ அணி-யோ உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். அப்படி நிகழவில்லை. அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்ட ஒரு பொதுவான வேலைத்திட்டம் அப்படியே எல்லாப் பிரதேசங்களுக்குமாக அமுல்படுத்தப்பட்டது. இது தொடர்பாக இந்தக் கட்டுரையாளர் உட்படச் சிலர் அப்பொழுதே அழுத்தமாக மீள் குடியேற்ற அமைச்சு உள்பட அன்றைய ஒருங்கிணைப்புக்குழுக்கள், மாவட்டச் செயலர்கள், திட்டமிடற் பிரிவுகள் போன்ற தரப்புகளுக்கு எடுத்துரைத்தனர்.

ஆயினும் அவை உரிய கவனத்திற் கொள்ளப்படவில்லை. இதனால் மீள் குடியேற்றம் என்பது, அந்தந்தக் கிராமங்களில் மக்கள் குடியேறியதாக அமைந்ததே அல்லாது மீளுயிர்ப்புப் பெற்றதாக அமையவில்லை. அதாவது குடியேறல்கள் நடந்தனவே தவிர, வரலாற்றின் இழைகளையும் மரபின் கண்ணிகளையும் உயிர்ப்பூட்டுவதாகவும் அமையவில்லை. ஆயினும் எல்லாவற்றையும் விட மக்கள் வலியவர்கள் என்பதால் அவர்கள் தங்களுடைய நினைவுகளின் வழியே சென்று தங்களால் முடிந்தளவுக்குத் தங்கள் ஊர்களை மீளுயிர்ப்புச் செய்தனர். இப்பொழுது காணப்படும் பச்சிலைப்பள்ளி என்பது அவ்வாறு மக்களால் வடிவமைக்கப்பட்டதே.

# சிறுவர் பூஞ்சோலை



MIRA (4år)

SANDRA (5år)



MALKIA (5år)




Bergen Tamilsk Avis
Ansvarlig redaktør: Julius Antonipillai - Adresse: Krohnegården 5b, 5146 Fyllingsdalen.- Telefon: 924 636 74
E-Post: ttoosai@gmail.com / antonipillai@hotmail.com
Org.nr: 926 840 320 - ISSN: 2703-8440
(Print ISSN: 2703-8785)
VIPS: 729129 - Konto: 3626 31 78585